சுருக்கம்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – பயிற்சிப் பிரிவு – புதிதாக பத்து அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டது – திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூருக்கு பதிலாக நன்னிலம் வட்டம் வண்டாம்பாளை ஊராட்சியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவங்க அனுமதித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (எஸ்.1) துறை**

அரசாணை (நிலை) எண்.35

நாள்: 15.04.2025
விசுவாவசு வருடம், சித்திரை –2,
திருவள்ளுவர் ஆண்டு –2056

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.115, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (எஸ்1) துறை, நாள் 25.11.2024.
2. மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம் நேர்முக கடிதம், ந.க.எண்.29/ஆ/2024, நாள் 28.08.2024.
3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர், கடிதம் ந.க.எண்.5287/திட்டம்3/2024, நாள்: 03.03.2025.

------

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் வாயிலாக, கடலூர் மாவட்டம் வேப்பூர், திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி, நாமக்கல் மாவட்டம் சேந்தமங்களம், புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை, இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, திருப்பத்தூர் மாவட்டம் நாட்ராம்பள்ளி, திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர், திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் ஏரல் ஆகிய பத்து இடங்களில் புதிதாக அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்க ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட நேர்முக கடிதத்தில், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூரில் வாடகை கட்டிடத்திற்கான தகுதியான இடம் கிடைக்கப் பெறவில்லை என்றும், மேலும் மன்னார்குடி வட்டம், தட்டாங்கோவில் ஊராட்சியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் இயங்கி வருவதாகவும், கூத்தாநல்லூரில் இருந்து தட்டாங்கோவிலானது 9 கி.மீ. தொலைவில் உள்ளதாகவும், தட்டாங்கோவில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நடப்பு கல்வியாண்டில் 69% சேர்க்கை மட்டுமே பதிவாகியுள்ளதாகவும், மேலும், திருவாரூர் சுற்று வட்டார பகுதிகளில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் இல்லாத காரணத்தால் திருவாரூர் நகர்ப்புறத்தை சுற்றியுள்ள மாணவர்கள் அங்கிருந்து 25 கி.மீ தொலைவிலுள்ள நீடாமங்கலம் அரசு

தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் மற்றும் 23 கி.மீ தொலைவிலுள்ள திருக்குவளை அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் சென்று பயிற்சி பெற வேண்டிய சூழலில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், வண்டாம்பாளை ஊராட்சியில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் கட்டுவதற்கும் மற்றும் வாடகைக்கும் தகுதியான அரசுக்குச் சொந்தமான இடம் உள்ளதாகவும், எனவே, கூத்தாநல்லூரில் புதிய தொழிற் பயிற்சி நிலையம் கட்டுவதற்கும் மற்றும் வாடகை கட்டிடம் தேர்வு செய்வதிலும் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு வண்டாம்பாளை ஊராட்சியில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திட அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர், மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையின் பேரில் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களை சந்தித்து வண்டாம்பாளையில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவங்குவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும், மேலும் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு, திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், வண்டாம்பாளை ஊராட்சியில் உரிய நிலமானது திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிலமாற்றம் செய்து வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும், புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தின் அருகாமையில் சிப்காட் தொழில் நிறுவனம் (SIPCOT – State Industries Promotion Corporation of Tamil Nadu) அமைந்துள்ளதாகவும், வண்டாம்பாளையை சுற்றி 10 கி.மீ பரப்பில் 28 அரசு / அரசு உதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகள் உள்ளதாகவும், எனவே, திருவாரூர் மாவட்டத்தில் தொடங்கப்பட உள்ள புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையத்தினை கூத்தாநல்லூருக்குப் பதிலாக நன்னிலம் வட்டம், வண்டாம்பாளை ஊராட்சியில் துவங்குவதற்கு அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையத்தினை திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூருக்குப் பதிலாக நன்னிலம் வட்டம், வண்டாம்பாளை ஊராட்சியில் துவங்குவதற்கு அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கொ. வீர ராகவ ராவ்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை – 600 032.
மாநில கணக்காயர், சென்னை – 600 018. (இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை வழியாக)
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம்.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்/சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை வழியாக)

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அலவலகம், சென்னை – 600 009.

மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் ேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.

அரசு செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–600 009.

நிதி(Edn.II)த் துறை, சென்னை – 600 009.

பொதுப்பணி துறை, சென்னை – 600 009.

இருப்புக் கோப்பு /உபரி நகல் (கோ.எண்.efile 5454/எஸ்.1/2024)

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

16.04.25

பிரிவு அலுவலர்

16/4/25